(7) அரசினர் மசோதாக்கள்.

திருமதி கே. பி. ஜானகியம்மாள் : மணி 12 ஆகிறது. நில உச்ச வரம்புத் திருத்த மசோதா முக்கியமான மசோதா. அதற்கு 1½ மணி நேரம் மட்டும் இந்த அவை ஒதுக்குவதாக இருந்தால் அவகாசம் போதாது. ஆகவே மாலையிலோ அல்லது நாளைக்கு ஒரு நாளோ சபையை வைத்துக் கொண்டால் நல்லதாக இருக்கும். தலைவர் அவர்களுடைய தீர்ப்பை எதிர்பார்க்கிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, இதைப் பற்றி எதிர்க் கட்சித் தலைவர் அவர்களிடம் பேசியிருக்கின்றேன். இதில் அக்கறை கொண்ட எல்லாக் கட்சித் தலைவர்களும் ஒத்துக் கொள்ளுவார்கள் என்ற நம்பிக்கையோடு நான் தங்களைக் கேட்டுக்கொள்ளுவது, இன்று மாலையில் மேலவை இருக்கிறது. அங்கே அமைச்சர்கள் எல்லாம் கேள்வி நேரத்தில் கலந்து கொள்ள வேண்டியிருப்பதால் மாலை 5 மணிக்குக் கூடி 9 மணி வரை அல்லது 10 மணி வரை சட்டமன்றப் பேரவையை நடத்திவிட்டு, அப்படியும் நேரம் போதாவிட்டால் அதற்குப் பிறகு நாளைக் காலையில் வைத்துக்கொண்டு முடித்து விடலாம் என்ற அளவுக்கு முடிவு செய்யலாம். நண்பகல் 12·00

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : தலைவர் அவர்களே, இந்த நில உச்ச வரம்பு திருத்த மசோதா மிகவும் முக்கியமான மசோதா. இதை நாம் அவசரப்பட்டு சபையை மாலையிலும் இரவிலும் கூட்டி முடிப்பதைவிட, ஒரு வாரம் தள்ளிப் போடமுடியுமா என்பதைப் பார்க்க வேண்டும். இரவில் வைத்தால் அதில் அங்கத்தினர்கள் அதிக அக்கறை காட்டமாட்டார்கள். தள்ளி வைக்கமுடியாது என்றால் நாளை வைத்துக்கொண்டால் எங்களுக்குச் சம்மதம்.

திரு. கரு. சீமைச்சாமி : தலைவர் அவர்களே, நிலச் சீர்திருத்த மசோதா முக்கியமான மசோதா. அதை உடனடியாக நிறைவேற்ற வேண்டுமென்ற அவசியமில்லை. இந்தக் கூட்டத் தொடரைக் கலைத்து விட்டு, 10 நாட்கள் கழித்து வைத்துக் கொள்ளலாம். இங்கே கொண்டு வரப்படும் மசோதாக்கள் எல்லாம் 2 மணி வரை பேரவையை நடத்தி அவசர அவசரமாக முடிக்கின்ற சூழ்நிலை இருக்கிறது. மாலை 5 மணி முதல் 10 மணி வரை அவைக் கூட்டத்தை நடத்தி இந்த மசோதாவை முடிப்பது என்பது சரியாக இருக்காது.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இது முக்கியமான மசோதா என்று திரு. சீமைச்சாமி சொன்னார்கள். சூடான மசோதாவும் கூட. அதனால்தான் சற்றுக் குளிர்ந்த நேரத்தில் மாலையில் 5 மணி முதல் 10 மணி வரை வைத்துக் கொள்ளலாம் என்று எதிர்கட்சித் தலைவரிடத்தில் பேசியிருக்கிறேன். 5 மணி முதல் 10 மணி வரை வைத்துக் கொண்டால், அப்படியும் நமக்கு நேரம் போதவில்லை என்று கருதினால் நாளைக் காலையில் வைத்துக் கொள்ளலாம்.

திரு. ஆ. கு. சுப்பையா : ஐயா, சபையில் உள்ள எல்லா அங்கத்தினர்களும் இதில் கலந்துகொள்ள வேண்டியிருக்கிறது. காங்கிரசு கட்சித் தலைவரும் அதில் இருப்பவர்களும் சொன்னால் அது எல்லோரையும் கட்டுப்படுத்தாது. எல்லாக் கட்சியினரும் அபிப்பிராயம் சொல்ல வேண்டியிருக்கிறது. ஆகவே 5 மணி முதல் 9 மணி வரை என்பது வேண்டாம். வேண்டுமென்றால் நாளை வைத்துக் கொள்ளலாம்; இல்லையென்றால் 10 நாள் கழித்து வைத்துக் கொள்ளலாம். இந்த மசோதா மிக முக்கியமான மசோதா என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : 5 மணி முதல் வைத்துக் கொள்ளுவதால் என்ன விவரங்கள் இல்லாமல் போய்விடும், என்ன விஷயம்